**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

## MCOP. No. 8/2021

**19.11.2025**

## P.W.1- தர்மர்

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த மனு முதல் தகவல் அறிக்கையின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மனுவில் பக்கம் 3ல் கலம் 9ல் கூறியுள்ள கு.எண்.1475-2020, பிரிவுகள் 279, 337, 304(ஏ) இதச என போட்டுள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணத்தில் சட்டப்பிரிவு 279, 337 இதச என போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சட்டப்பிரிவில் இல்லாத விசயங்களை மனுவில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வாகனம் TN 07 7071 என்றால் சரியல்ல. விபத்து ஏற்படுத்திய வாகனமாக சொல்லப்படும் TN 07 AP 7770 என்ற வாகனம் விபத்து சம்மந்தப்பட்டதாக எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மனுதாரர்கள் ஆதிலட்சுமி, பாலகிருஷ்ணன், கண்ணன் திருமணமாகி தனியாக வசிக்கிறார்கள் என்றால் சரிதான். மனுதாரர்களின் ஆதார் அட்டை முகவரியும், மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள முகவரியும் வெவ்வேறானவை என்றால் சரிதான். 27.12.2020ல் விபத்து நடைபெற்றது. முதல் தகவல் அறிக்கை தேதி தெரியுமா என்றால் தெரியாது. ம.சா.ஆ.8 ஆவணம் எனது தந்தையை அப்பல்லோ மருத்துவமனையிலிருந்து 10.01.2021ல் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் இறந்தது 12.01.2021 ஆகும். எனது தகப்பனார் இந்த விபத்தினால் தான் இறந்தார் என்பதற்கு தகப்பனார் உடலை பிரேத கூறாய்வு செய்யவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு விபத்து சமயத்தில் 75 வயது ஆகும். எனது தகப்பனாரின் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் அனுப்பிய

பதிலறிவிப்பில் வழக்கிற்கும், தனக்கும் தொடர்பில்லை என தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். நிருபண வாக்குமூலத்தில் காயம்பட்ட எனது தந்தையை

9

மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸில் ஏற்றி அழைத்து சென்றோம் என கூறியுள்ளது தவறு. முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எனது தகப்பனார் உயிர் பிழைக்க வாய்ப்பில்லை என மருத்துவர்கள் கைவிட்டதாக சொல்லியுள்ளேன். மேற்படி மருத்துவரை விசாரிக்க தயாராக உள்ளேன். இந்த விபத்திற்கும், எதிர்மனுதாரருக்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரிடமிருந்து இழப்பீடு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.11.19 18:18:21 +0530

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.